# குருந்தூர் மலையில் தமிழ் பௌத்தம் இருந்தமையை தேரர்கள் படிக்க வேண்டும் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

சிங்கள மக்களை நரகத்திற்கு கொண்டு செல்லும் கரும வினைகளை எல்லாவல மேதானந்த தேரர் செய்கின்றார், என தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

நாட்டில் இரத்தக்களரி ஏற்படுவதற்கு மதத் தலைவர்களே காரணம், எனவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

குருந்தூர் மலைப் பகுதியில் ஆலயங்கள் எவையும் இல்லை எனவும், குறித்த பகுதி பௌத்த பாரம்பரிய நிலம் எனவும் மேதானந்த தேரர் கூறிய கருத்திற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பூர்வீகமாக பஞ்ச ஈச்சரங்களைக் கொண்டு தமிழர்கள் வாழ்ந்தார்கள். குருந்தூர் மலைப் பகுதியில், தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்ற வரலாற்றை எல்லாவல தேரர் உட்பட அனைத்துத் தேரர்களும் படிக்க வேண்டும்!

பிரபாகரனின் கொள்கைகளை தமிழ்க் கட்சிகள் பின்பற்றுவதாக எல்லாவல தேரர் குறிப்பிடுகின்றார். இவர் போன்றவர்களின் செயற்பாடுகள் சிங்கள மக்களை நரகத்திற்குக் கொண்டு செல்லும் செயற்பாடே எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் இரத்தக்களரி ஏற்படுவதற்கும் மதத்தலைவர்கள்தான் காரணம்!,



எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 06 செவ்வாய்க்கிழமை 20.06.2023 கதிர் 07

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

## இன்று உலக அகதிகள் தினம்!

அது தொடர்பான விரிவான பார்வை 2ஆம் பக்கத்தில் ➤

நாடாளுமன்ற வரவு செலவுத் திட்டத்திற்கான அலுவலகச் சட்ட மூலம் திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது

## நாட்டை மீட்டெடுக்க சம்பந்தன், மனோ கட்சிகளின் முழு ஆதரவும் மிகவும் அவசியம்; வஜிர சுட்டிக்காட்டு

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளினதும் முழு ஆதரவு மிகவும் அவசியம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்திருக்கிறார்.



"நிலையான தொரு தேசிய வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியுள்ளார். 2048 ஆம்ஆண்டுவரை அந்த வேலைத் திட்டத்துடன் பயணிக்குமாறு ஜனாதிபதி கூறியுள்ளார்.

எனவே, பொருளாதாரச் சமரில் வெல்வதற்கு எமக்கு ஸ்ரீரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட் 2➤

## பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் இரண்டரை வயதுக் குழந்தை உயிரிழப்பு

### தவறான மயக்க மருந்து காரணம்?



கண்டி பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் மயக்க மருந்து வழங்கப்பட்ட இரண்டரை வயதுக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குழந்தைக்கு, சத்திரசிகிச்சைக்காக மயக்கமருந்து செலுத்தப்பட்டது.

மயக்க மருந்து கொடுக்கப்பட்டதாலேயே தனது குழந்தை உயிரிழந்ததாக குழந்தையின் தந்தை தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாகவும், பேராதனை போதனா வைத்தியசாலையில் மகப்பேற்றுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண்ணொருவரும் மற்றுமொரு பெண்ணும் இவ்வாறு உயிரிழந்திருந்தனர் என்று தரவுகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து, வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் மருந்துகளை உரிய முறையில் கண்காணிக்க வேண்டும் என அரச மருந்தாளர் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

## தினேஷ் சாப்டரின் அறிக்கைகளைப் பெற குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவு

வர்த்தகர் தினேஸ்சாப்டரின் மரணம் தொடர்பான விசாரணைகளில், நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.


ஏற்கனவே அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்ட பல இரத்த மாதிரிகள் உட்பட வழக்குடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கைகள் நீதிமன்றத்திற்கு இன்னும் கிடைக்கவில்லை



என கொழும்பு மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரிய குறிப்பிட்டார்.

அரசாங்கப் பகுப்பாய்வாளரிடம் இருந்து இந்த அறிக்கைகளைப் பெறுவதற்குத் தேவையான நட 2➤

## இன்று நள்ளிரவு முதல் பாண் விலை குறைப்பு



இலங்கையில் இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பாண் உட்பட அனைத்து பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித் 2➤

## யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அழைப்பு

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ்ப்பாண பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்

முகப்புத்தகத்தில் பதிவிட்ட ஒருவரை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், எதிர்வரும் 22 ஆம் திகதி மதியம் யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக்குழு வில் விசாரணைக்கு சமுகமளிக்குமாறு மனித உரிமை ஆணைக்குழுவினால் அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது,.

இதே வேளை, யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை இடமாற்றக் கோரி இன்று பெண்ணொருவரால் போராட்டம் ஒன்று முன்னெடுக்க 2➤




- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# இன்று உலக அகதிகள் தினம்!




உலக அகதிகள் தினம் ஆண்டுதோறும் ஜூன் 20 ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

2000 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் சிறப்புத் தீர்மானமொன்றின்படி, அகதிகளுக்கான தமது ஆதரவினை வெளிப்படுத்தும் முகமாக, ஜூன் 20 ஆம் திகதி உலக அகதிகள் தினமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆபிரிக்க அகதிகள் நாள் ஜூன் 20 இல் கடைப்பிடிக்கப்படுவதால் இந்தநாள் உலக அகதிகள் நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

பல்வேறு மோதல்களுக்குள் சிக்கி அகதிகளாக, தாம் வசிக்கும் நாட்டினுள்ளும், பிற நாடுகளிலும் இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களுக்குள்ளாகி வாழ்ந்துவரும் அகதிகள் பற்றிய விழிப்புணர்வினை உலக மக்களிடத்தில் ஏற்படுத்துவதே இந்நாளின் முக்கியமான நோக்கமாகும்.

இன்றைய நாளில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும் பல்வேறு போர்களால் அரசியல், சமூகச் சூழல்களால் அல்லலுறும் அகதிகளை நினைவுகூரும் வகையில் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கருத்தரங்குகள், நினைவஞ்சலி நிகழ்வுகளெனப் பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்படும்.

“எல்லாச் செயலும் கணக்கிடப்படுகிறது. எல்லோருடைய உயிரும் மதிப்புமிக்கவை” என்பதே ஐ.நா.வின் அகதிகள் தினத்தின் பிரகடனமாகும்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடு களின் ஆணையம் ஒவ்வோர் ஆண்டும் இந்நிகழ்வுகளுக்கான கருப்பொருளைத் தீர்மானிக்கிறது. இந்த வருடத்துக்கான கருப்பொருளாக, “வீட்டிலிருந்து தொலைவில் நம்பிக்கை” என்பது உள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு அகதிகள் வாழ்வு என்பது முப்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக விதிக்கப்பட்ட சாபமாகவும், பழகிப்போன காயமாகவும் இருந்துவருகிறது. அவர்களுக்கு ஏற்பட்ட வடுக்கள் ஆறாக் கனல்களாகத் தகித்துக்கொண்டு அகதி வாழ்வின் கோரத்தைப் பறைசாற்றிவருகின்றன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சிரிய உள்நாட்டுப் போரிலிருந்து தப்பிக்கும் நோக்குடன் பலர் ஐரோப்பாவில் தஞ்சமடைவதற்காக றப்பர் படகு ஒன்றில் பயணித்தபோது, படகு விபத்திற்குள்ளானதையடுத்து, கடலில் மூழ்கி பல நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகியிருந்தனர்.

அவ்வாறு பலியானவர்களில் 3 வயது குழந்தையின் உடல் ஒன்று 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி கரை ஒதுக்கியது. உடல் கவிழ்ந்த நிலையில், கடல் அலை கரையொதுக்கியிருந்தது. அந்த பரிதாபக் காட்சி உலக வல்லரசுகளைக் கூட கலங்கடித்தது என்றே கூறவேண்டும். அந்த ஒற்றைப் புகைப் படமே அகதிகள் குறித்த துன்பத்தின் கொடூரமான சாட்சியாக அமைந்திருந்தது.

சொந்த நாட்டைவிட்டு, இருக்கும் சிறிய சேமிப்பையும் இருப்பிடத்தையும் விட்டு, ஒருவர் வேறு நாட்டிற்குப் பயணிக்கிறார் என்றால் அவரின் கையறு நிலையை உணர்ந்து கொள்ளவேண்டும். உயிர் பிழைத்தால் போதும் என்பதைத் தாண்டி அந்தப் பயணத்தின் இலட்சியம் வேறொன்றும் இல்லை.

உலகில் ஒவ்வொரு நிமிடமும் சராசரியாக 20 பேர் தங்கள் நாட்டில் வசிக்க முடியாமல் அகதிகளாக வேறு நாட்டில் தஞ்சமடையச் செல்கின்றனர்.

2011ஆம் ஆண்டு கணக்கின் படி, உலகளவில் 1 கோடியே 52 லட்சம் பேர் அகதிகளாக வாழ்கின்றனர் என, யூ.என்.எச்.ஆர்.சி ஆய்வில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து, 2020 ஆம் ஆண்டு ஆய்வில் உலகம் முழுவதும் சுமார் ஏழு கோடியே 80 லட்சம் பேர் அகதிகளாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இந்திய திறந்த சர்வதேச கராத்தேப் போட்டி வடமாகாண வீராங்கனைக்கு வெண்கலம்



இந்தியாவின் புதுடெல்லியில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான இந்திய திறந்த சர்வதேச கராத்தே சுற்றுப்போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கை வீரர்கள் அடங்கிய குழுவொன்று அண்மையில் இந்தியா சென்றிருந்தது.

அந்தப் போட்டிகளில் இலங்கை வீரர்கள் 5 வெள்ளிப்பதக்கங்கள் மற்றும் 11 வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்துள்ளனர்.

வடமாகாணத்தில் இருந்து முதல் தடவையாக இலங்கைத் தேசிய அணி சார்பாக இந்தியத் தேசிய அணியுடன் போட்டியிட்ட மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல மாணவியான ரி.சாணுயா வெண்கலப் பதக்கத்தினைப் பெற்று பெருமை சேர்த்துள்ளார்.



இலங்கை வீரர்களுக்கான முகாமையாளராக சென்செய் கீர்த்தி பஸநாயக்க, பயிற்றுனராக சென்செய் இசட்.ஏ.ரவூவ் ஆகியோர் கடமையாற்றினர்.

## பலாலி சர்வதேச விமான நிலைய ஓடு பாதையை விஸ்தரிக்க தீர்மானம்

பலாலி சர்வதேச விமான நிலையத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்காக 168 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் குறித்த அமைச்சு தெரிவித்துள்ளது.

பலாலி சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதையை விஸ்தரிப்பதற்கும் பயணிகள் முனையத்தை விரிவுபடுத்துவதற்கும் இலங்கை அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது. அதற்கமைய, தற்போது காணப்படும் 900 மீற்றர் ஓடுபாதையைப் புனரமைத்து, புதிதாக 300 மீற்றர் ஓடுபாதையை இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போதுள்ள சிறிய பயணிகள் முனையத்தில் நிலவும் இடப் பற்றாக்குறையால் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதே அதனை விஸ்தரிப்பதற்கான நோக்கம் எனவும் அமைச்சினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இன்று .......

முதலாம் பக்கத்தொடர்ச்சி

துள்ளது. அதன்படி, 450 கிராம் பாண் இறத்தால் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப் படவுள்ளது.

அத்துடன், ஏனைய பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளும் 10 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதாகவும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## நாட்டை ......

முதலாம் பக்கத்தொடர்ச்சி

டமைப்பு உட்பட இந்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளினதும் முழு ஆதரவு மிகவும் அவசியம்” என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

## தினேஷ் ......

முதலாம் பக்கத்தொடர்ச்சி

வடிக்கைகளை எடுக்குமாறும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு மேலதிக நீதவான் உத்தரவிட்டார்.

இதற்கிடையில், தேவைப்பட்டால் இந்த அறிக்கைகள் குறித்து அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு நினைவூட்டல் அனுப்புவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தினேஷ் சாப்டரின் மரணத்திற்கான காரணத்தை உறுதிப்படுத்த, புதிதாக நியமிக்கப்பட்ட மருத்துவ நிபுணர்கள் குழு முன்னிலையில் சாப்டரின் உடல் சமீபத்தில் தோண்டியெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணப் ......

முதலாம் பக்கத்தொடர்ச்சி

ப்பட்டது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகளை முன்வைத்து, யாழ்ப் பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்திற்கு முன்னால் குறித்த பெண் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட -
maalaikkathir@gmail.com

# போதைப்பொருள் பாவித்து வாகனம் செலுத்துவோர் உடனடி சட்ட நடவடிக்கை எடுக்க பொலிசார் தயார்!

போதைப்பொருள் மற்றும் ஏனைய அனைத்துவிட சட்ட விரோதமான பொருட்களை உபயோகித்துவிட்டு வாகனம் செலுத்துவோருக்கு எதிராக நாடளாவிய ரீதியில் விசேட பொலிஸ் நடவடிக்கையொன்று எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சட்டவிரோத பொருட்களை உபயோகித்துவிட்டு வாகனம் செலுத்வோரை அடையாளம் கண்டு கைது செய்வதற்கான நடவடிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது, சட்டவிரோதமான போதைப் பொருட்களை பாவித்து வாகனம்செலுத்திய 41 சாரதிகள் இனங்காணப்பட்டதாகவும், அவர்களில் 19 பேர் பேருந்துச் சாரதிகள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் அதிகளவு வீதி விபத்துக்கள் சட்டவிரோதமான போதைப் பொருட்களை பாவித்து வாகனங்களை செலுத்துவதனால் ஏற்படுவதாகவும், நாட்டில் பதிவாகும் வீதி விபத்துக்களின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பு காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2020 இல் பதிவான 23,704 விபத்துகளில் 2,370 பேர் உயிரிழந்துள்ளனர், 2021இல் 22,847 சாலை விபத்துகளில் 2,559 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூன் 18 ஆம் திகதி வரை பதிவான 8,875 சாலை விபத்துகளில் 1,043 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஜூன் 12ஆம் திகதி முதல் மேல் மாகாணத்தில் சட்டவிரோதமான பொருட்களை பாவிக்கும் சாரதிகளை அடையாளம் காணும் விசேட நடவடிக்கையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில், 1,781 பேர் சோதனையிடப்பட்டு 41 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சாரதிகளில் 9 முச்சக்கரவண்டிச் சாரதிகளும் 13 மோட்டார் சைக்கிள் சாரதிளும் அடங்குகின்றனர்.



குற்றமிழைத்த ஏழு சாரதிகள் விடுவிக்கப்பட்டதோடு, 15 சாரதிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் ஓட்டுநர் உரிமம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மிகுந்த பிரயத்தனத்தோடு கைது செய்யப்பட்ட மேலும் இரு சாரதிகளுக்குத் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் தரப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லூர் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் பொது முகாமைத்துவத்தை அமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நல்லூர் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தினை பொதுமுகாமைத்துவம் ஒன்றினை அமைத்து நிர்வகிப்பதற்கு ஆவன செய்யுமாறு கோரி மகஜர் ஒன்று நல்லூர் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் பூசை செய்யும் 3 குடும்பங்களைச் சேர்ந்த பூசகர்களிடையே நீண்டகாலமாக முரண்பாடு காணப்பட்ட நிலையில், இவ்வருட மகோற்சவத்தினை யார் நடத்துவதென இரு பூசகர்களிடையே இடம்பெற்ற முரண்பாடு காரணமாக கடந்த 9 ஆம் திகதி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வேண்டிய மகோற்சவம் உரிய நேரத்தில் ஆரம்பமாகாது தடைப்பட்டு பின் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய மாலையிலெயே ஆரம்பமானது.

பலகாலமாக ஆலயத்தில் முரண்பாடுகள் அதிகரித்துள்ளதன் காரணமாக ஆலய மகோற்சவ உபயகார்கள், ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ளும் பொது மக்கள் இணைந்து, வீரமாகாளி அம்மன் ஆலயத்தினை நிர்வகிப்பதற்கு என பொது முகாமைத்துவத்தினை அமைக்குமாறும் எதிர்வரும் ஆண்டுகளில் தொடர்சியாக திருவிழாவினை தடையின்றி நடாத்துவதற்கு ஆவணை செய்யுமாறும்கோரி நல்லூர் பிரதேச செயலாளர் எழிலரசி அன்ரன் யோகநாயகத்திடம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.



குறித்த மகஜர் தொடர்பில் நல்லூர் பிரதேச செயலகத்தினால் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்ளும் 3 குடும்பங்களிடமும் தற்போது தனித்தனியாக அபிப்பிராயம் பெறப்படவுள்ளது. ஆலய மகோற்சவம் முடிந்ததும் பொதுமுகாமைத்துவத்தினை அமைப்பது தொடர்பில் ஆராயப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

பூசகர்களுக்கிடையில் உருவாகிய முரண்பாட்டால் மகோற்ச ஆரம்ப தினத்தில் ஆலயம் பூட்டப்பட்டு ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம்பெறாது மக்கள் ஆலயத்திற்கு வெளியில் அமர்ந்திருந்த அவலம் நடைபெற்றதால் இது போல் மீண்டும் ஒருமுறை நடவாது இருக்க உரிய அதிகாரிகள் ஆவணை செய்யவேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ரணில் நாடு திரும்பியதும் விடைபெறும் விக்கிரமரத்ன?

புதிய பொலிஸ்மா அதிபர் அடுத்த வாரம் நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகின்றது.



பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன வின் சேவைக் காலம் எதிர்வரும் 26ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன கடந்த மார்ச் 26 ஆம் திகதியன்று ஓய்வு பெறவிருந்தார். எனினும், அவருக்கு மூன்று மாத சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

அடுத்த பொலிஸ்மா அதிபர் பதவிக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான தேசபந்து தென்னக்கோன், நிலந்த ஜயவர்தன, லலித் பத்திநாயக்க, பிரியந்த வீரசூரிய மற்றும் அஜித் ரோஹன ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதுடன், யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இதுவரை உறுதியான தீர்மானம் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போது, புதிய பொலிஸ்மா அதிபர் தொடர்பில், ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் அவருடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும் எனக் கூறினார்.

தற்போதைய பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன இலங்கையின் 35 ஆவது பொலிஸ்மா அதிபர் ஆவார். அவர் 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

## நெடுந்தீவில் குமுதினிப் படகு மீண்டும் பயணிகள் சேவையில்



குமுதினிப் படகு மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவிற்கான பயணிகள் போக்குவரத்தின் பிர தான சாதனமான குமுதினிப் படகின் சேவை, திருத்த வேலை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இன்று முதல் அது மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான குமுதினிப் படகு மற்றும் வடதாரகைப் படகு என்பன நெடுந்தீவிற்கான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்தன. குமுதினிப் படகு பழுதடைந்ததையடுத்து, வடதாரகைப் படகு மட்டுமே சேவையில் ஈடுபட்டு வருகின்றது.

இதன் மூலம் நெடுந்தீவிற்கான போக்குவரத்தில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பெரும் சிரமங்கள் தீர்க்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கையில் எச்.ஐ.வி தொற்று 13 வீதத்தால் அதிகரித்துள்ளது

நடப்பாண்டின் முதல் காலாண்டில் இலங்கையில் எச்.ஐ.வி தொற்று 13 வீதத்தால் அதிகரித்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார மன்றத்தில் இன்று தெரிவித்தார்.

இந்த நிலைமை நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பதால் இது தொடர்பில் அவதானிக்க வேண்டுமெனவும், நாங்கள் வரவு செலவு அலுவலகம் பற்றிப் பேசுகிறோம், மறுபுறம், எச்.ஐ.வி தொற்று அதிகரித்துள்ளது, எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலக சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# முதல்வர் மட்டுமே அமைச்சரவையில் எஞ்சி இருப்பார் அவர் மீதும் புகார் அளித்துள்ளோம் : அண்ணாமலை



அமைச்சர் பொன்முடி மீதான ஊழல் வழக்கை விசாரிக்க தடை இல்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இன்னும் ஓராண்டுக்குள் தமிழக அமைச்சரவையில் முதல்வர் மட்டுமே எஞ்சி இருக்கக்கூடிய நிலை ஏற்படும்" - அண்ணாமலை.

திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூரில் 53 ஆண்டுகளுக்கு முன் மின் கட்டணத்தை குறைக்க வலியுறுத்தி போராடி, துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த விவசாயிகளின் நினைவு ஸ்தூபியில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.


இதையடுத்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஜூலை 9 ஆம் திகதி பா.ஜ.க. சாரபில் தொடங்கப்பட உள்ள நடைப்பயணத்தில் வெள்ளை அறிக்கை வெளியிடப்படவுள்ளது. அந்த அறிக்கையில், கள்ளுக் கடைகளுக்கான ஆதரவு, அடுத்த மூன்று ஆண்டுகளில் விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள், பனைமரம் மற்றும் தென்னை மரங்களைப் பாதுகாப்பதன் மூலம் ஒரு லட்சம் கோடி வருவாய் ஈட்டக்கூடிய வழிமுறைகள் இடம்பெறவுள்ளன.

அமைச்சர் பொன்முடி மீதான ஊழல் வழக்கை விசாரிக்கத் தடை இல்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஏற்கெனவே, அமைச்சர் செந்தில் பாலாஜி அமலாக்கத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளார். இன்னும் ஓராண்டுக்குள் தமிழக அமைச்சரவையில் முதல்வர் மட்டுமே எஞ்சி இருக்கக்கூடிய நிலை ஏற்படும். முதல்வர் மீதும் சி.பி.ஐ.யில் புகார் அளித்துள்ளோம்.

நாம் தமிழர், கட்சியும் பா.ஜ.க.வும் கொள்கை ரீதியில் வேறுபட்டு இருந்தாலும் தமிழகத்தில் ஊழல் இல்லாத ஆட்சியைக் கொண்டுவர ஒரே கோட்டில் பயணிக்கிறோம், என்று தெரிவித்துள்ளார்.

அண்ணாமலை வருவதற்கு முன்பாக அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வாகனத்துக்கும் ஒலிபெருக்கிக்கும் பொலிசார் அனுமதி வழங்க மறுத்ததாகவும், பா.ஜ.க.வினரைப் பொலிசார் தரக்குறைவாகப் பேசியதாகவும் கூறி, கோவை ஈரோடு தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியலில் பா.ஜ.க.வினர் ஈடுபட்டனர். இதனால், சிறிது நேரம் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. பேச்சுவார்த்தைக்குப் பின் பா.ஜ.க.வினர் போராட்டத்தைக் கைவிட்டனர்.

# 'றோ' ஏஜென்சியின் தலைவராக ரவி சின்ஹா ஐ.பி.எஸ். நியமனம்



இந்தியாவின் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு எனப்படும் 'றோ' ஏஜென்சியின் புதிய தலைவராக தொழில்நுட்ப செயல்பாடுகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர் என அழைக்கப்படும் ரவி சின்ஹா ஐ.பி.எஸ். நியமிக்கப்பட்டிருக்கிறார்.

'றோ' ஏஜென்சியின் தற்போதைய தலைவர் சமந்த் கோயலின் பதவிக்காலம் ஜூன் 30 ஆம் திகதியோடு முடிவடையும் நிலையில், ரவி சின்ஹா புதிய தலைவராக அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

சமந்த் கோயலின் பதவிக் கால முடிவுக்குப் பிறகு பதவியேற்கவுள்ள ரவி சின்ஹா, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு 'றோ' ஏஜென்சியின் தலைவர் பதவியில் இருப்பார். சீக்கியத் தீவிரவாதம், மணிப்பூர் கலவரம் என முக்கியப் பிரச்சினைகளுக்கு மத்தியில் ரவி சின்ஹா பதவியேற்பதால், இந்த நியமனம் எதிர்பார்ப்புகளை அதிகரித்திருக்கிறது.

சத்தீஸ்கர் பகுதிக்கான தெரிவில் 1988 ஆம் ஆண்டுப் பிரிவு ஐ.பி.எஸ் அதிகாரியான ரவி சின்ஹா, 'றோ' ஏஜென்சியின் செயல்பாட்டுப் பிரிவின் தலைவராக ஏழு ஆண்டுகள் பதவியிலிருந்திருக்கிறார். இப்போதைக்கு 'றோ' ஏஜென்சியின் இரண்டாவது தளபதியாகவும் அவரே இருக்கிறார். இதுமட்டுமல்லாமல் தற்போது அமைச்சரவைச் செயலகத்தில் சிறப்புச் செயலாளராகவும் அவர் இருக்கிறார்.

ரவி சின்ஹாவைப் பொறுத்தவரை, ஜம்மு-காஷ்மீர் பிரச்சினை, இடதுசாரித் தீவிரவாதம் போன்ற முக்கியமான பிரச்சினைகளை நுணுக்கமாக அணுகக்கூடியவராக அறியப்படுகிறார்.

'றோ' ஏஜென்சியின் நுண்ணறிவு சேகரிப்புத்துறையில் நவீன தொழில்நுட்பம் கொண்டுவரப்பட்டதற்கு ரவி சின்ஹா முக்கியக் காரணம் என்று கூறப்படுகிறது. குறிப்பாக இவர் தொழில்நுட்பம் சார்ந்த செயல்பாட்டு நடவடிக்கைகளில் சிறந்தவராக அறியப்படுகிறார்.

# அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு நாளை இதய அறுவை சிகிச்சை



சட்டவிரோதப் பணப்பரி மாற்றத் தடைச்சட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட தமிழக அமைச்சர் செந்தில் பாலாஜியை விடுவிக்க உத்தரவிட வேண்டும், என அவருடைய மனைவி மேகலா சென்னை உயர் நீதிமன்றில் ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை கடந்த 15 ஆம் திகதி விசாரித்த உயர்நீதிமன்றம், செந்தில் பாலாஜியை பரிசோதித்து இரு மருத்துவக் குழுவினர் அளித்த அறிக்கையைச் சந்தேகிக்க முடியாது எனக் கூறி, அவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற அனுமதி அளித்து உத்தரவிட்டது.

தற்போது அமலாக்கத்துறை யின் காவலில் இருக்கும் தமிழக அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு இரத்த நாளங்களில் அடைப்பு கண்டறியப்பட்டதால், பைபாஸ் அறுவைச் சிகிச்சை செய்ய முடிவு செய்யப்பட்டது. அதன்படி, நாளை அதிகாலை பைபாஸ் அறுவை சிகிச்சை செய்யப்படும், என்று தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

# அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா புறப்பட்டார் இந்தியப் பிரதமர் மோடி

இந்தியப் பிரதமர் பிரதமர் நரேந்திர மோடி 3 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று அமெரிக்காவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார். இந்தப் பயணத்தின் சிறப்பம்சமாக ஜூன் 22 ஆம் திகதி அமெரிக்க நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் மோடி உரையாற்றவிருக்கிறார்.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அவரின் மனைவி ஜில் பைடன் ஆகியோரின் அழைப்பை ஏற்று பிரதமர் மோடி அமெரிக்காவில் நாளை புதன்கிழமை முதல் வெள்ளிவரை அரசு முறைப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் புதன்கிழமை நடைபெறவிருக்கும் சர்வதேச யோகா தின நிகழ்ச்சியிலும் மோடி கலந்து கொள்ளவிருக்கிறார்.

அமெரிக்க அதிபரும் அவரின் மனைவியும் இணைந்து பிரதமர் மோடிக்கு வரும் 22 ஆம் திகதி அரசு சார்பில் விருந்து அளிக்கவுள்ளனர். அதே நாளில் அமெரிக்க நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றவுள்ளார். வொஷிங்டனில் உள்ள சர்வதேச வர்த்தக மையத்தில் வரும் 23 ஆம் திகதி இந்திய வம்சாவளிச் சமூகத்தின் முக்கியத் தலைவர்களுடைய சந்திப்பில் பிரதமர் மோடி உரையாற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க பயணத்தை முடித்துக்கொண்டு எகிப்துக்கும் வரும் 24, 25 ஆகிய திகதிகளில் மோடி அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார். பிரதமரான பிறகு எகிப்துக்கு மோடி பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

# சென்னையில் 40 கி.மீ வேகத்தை மீறி வாகனம் செலுத்துவோருக்கு அபராதம்

சென்னையில் மணித்தியாலத்துக்கு 40 கி.மீ என்ற வேகத்தை மீறி வாகனத்தை செலுத்துவோருக்கு அபராதம் விதிக்கப்படும் என சென்னை பொலிஸ் கமிஷனர் சங்கர் ஜிவால் கூறியுள்ளார்.

விபத்துகளைக் குறைக்க, மணித்தியாலத்துக்கு 40 கி.மீ வேகம் என்ற கட்டுப்பாடு அவசியம் எனவும், இந்தக் கட்டுப்பாடு சென்னையில் 10 இடங்களில் அமல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இரவு வேளையில் மணித்தியாலத்துக்கு 50 கி.மீ. என்ற வேகம் அதியுச்ச எல்லையாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வேகமாகச் செல்லும் வாகனங்களைக் கண்டறிய தற்போதுள்ளவற்றை விட, மேலும் 20 இடங்களில் கண்காணிப்புக் கருவிகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மாயாவதி, முலாயம் சிங் முயன்றும் முடியவில்லை சந்திரசேகர் ராவாலும் முடியாது!- அஜித் பவார் கருத்து

மகாராஷ்டிராவில் இந்த ஆண்டு மாநகராட்சித் தேர்தலும், அடுத்த ஆண்டில் மக்களவை மற்றும் சட்டமன்றத் தேர்தல்களும் வரவிருக்கின்றன.

இத்தேர்தல்களில் போட்டியிட தெலங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவின் கட்சி முயன்று வருகிறது. இதற்காக மகாராஷ்டிராவில் கட்சியை வளர்க்கும் வேலையில் சந்திரசேகர் ராவ் ஈடுபட்டுள்ளார். அதோடு மகாராஷ்டிரா எல்லையோர நகரங்களில் பொதுக்கூட்டங்களையும் அவர் நடத்தி வருகிறார். அத்தோடு, முக்கிய மகாராஷ்டிரா அரசியல் தலைவர்களை தங்களது பக்கம் இழுக்கும் வேலையிலும் ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள மகாராஷ்டிரா முன்னாள் துணை முதல்வரும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான அஜித் பவார், இதற்கு முன்பு உத்தரப்பிரதேசத்தில் முதல்வர்களாக இருந்த போது மாயாவதி, முலாயம் சிங் யாதவ் ஆகியோர் மகாராஷ்டிராவில் தங்களது கட்சியை வளர்க்க முயன்றனர். ஆனால், அவர்களால் அந்த முயற்சியில் வெற்றி பெற முடியவில்லை. அதே முயற்சியை சந்திரசேகர் ராவ் எடுத்துள்ளார்.

சந்திரசேகர் ராவ் தேசியத் தலைவராக வர விரும்பலாம். எனவே இது போன்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளார். தெலங்கானா முதல்வராக இருக்கும் சந்திரசேகர் ராவ் மகாராஷ்டிரா கட்சிக்கு தலைமை தாங்க இருக்கிறார். எனவே, இங்குள்ளவர்களுக்கு வாய்ப்பு கிடைக்காது, என்று குறிப்பிட்டுள்ளார்.



# வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்திப்பில் அண்டனி பிளின்கன் - ஷி ஜின்பிங்



அமெரிக்க இராஜாங்க செயலாளரான அண்டனி பிளின்கன் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கை சந்தித்து நேற்றைய தினம் கலந்துரையாடியுள்ளார்.

அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் 5 வருடங்களின் பின்னர் சீனாவிற்குச் சென்றுள்ளமையால், இந்தச் சந்திப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

சீன ஜனாதிபதியைச் சந்திக்கப்போவதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அறிவித்திருந்த போதும் இந்தச் சந்திப்பு நிச்சயமற்ற நிலையிலேயே நீடித்தது. அண்மையில் சீனாவின் உளவு பலூன்கள் அமெரிக்க எல்லைக்குள் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து, இரு நாடுகளுக்குமிடையில் முறுகல் நிலை தோன்றியிருந்தது.

நீண்ட இழுபறிக்கு பின்னரான இந்தச் சந்திப்பில், இரு நாடுகளையும் பாதித்துக் கொண்டிருக்கும் பொருளாதார விவகாரங்கள், அமெரிக்க தகவல்கள் திருட்டுத் தொடர்பாக சீனா மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் 5 பலஸ்தீனியர்கள் உயிரிழப்பு



ஜெனின் அகதிகள் முகாம் இஸ்ரேலியப் படைகள் நடத்திய தேடுதல் வேட்டைத் தாக்குதலில் 15 வயதுச் சிறுவன் உட்பட ஐந்து பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதலில் 90க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனப் படைகள் இஸ்ரேலின் துருப்புக் கப்பல்களைக் குறிவைத்துத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இந்தத் மோதலில், ஏழு இஸ்ரேலிய வீரர்களும் எல்லைப் பொலிஸ் அதிகாரியும் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதைத் தொடர்ந்து இஸ்ரேலியப் படைகள் ஏவுகணைகளை வீசியிருந்தன.

ஜெனின் அகதிகள் முகாமின் மீது நடந்த தாக்குதல் மிகவும் ஆபத்தானது எனவும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனவும் பலஸ்தீனியத் தரப்பு தெரிவித்துள்ளது. தாக்குதல் சம்பவத்தையடுத்து, மக்கள் வெளியே நடமாடாமல் வீடுகளுக்குள் முடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து, மேற்குக் கரை மற்றும் காசா பகுதியில் ஏறக்குறைய 161 பாலஸ்தீனியர்களும், 21 இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டுள்ளதாகத் தரவுகள் கூறுகின்றன.

## முதல் போட்டியில் வெற்றிபெற ஆஸிக்கு 174 ஓட்டங்கள் தேவை

இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஆஷஸ்தொடரின் முதல் போட்டியில் வெற்றிபெற அவுஸ்திரேலிய அணிக்கு இரண்டாவது இன்னிங்சில் இன்னும் 174 ஓட்டங்கள் தேவைப்படும் நிலையில் நான்காவது நாள் ஆட்டம் நிறைவுபெற்றிருந்தது.

முன்னதாக இங்கிலாந்து தனது முதல் மற்றும் இரண்டாம் இன்னிங்ஸ்களில் 393, 273 ஓட்டங்களையும், அவுஸ்திரேலியா தனது முதல் இன்னிங்சில் 386 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டன.

வெற்றி பெறவேண்டுமானால், மொத்தமாக 281 ஓட்டங்கள் தேவை என்ற இலக்கோடு போட்டியின் நான்காவது நாளில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்றைய நாள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

களத்தில் உஸ்மான் க்வாஜா 34 ஓட்டங்களோடும், ஸ்கொட் போலன்ட் 13 ஓட்டங்களோடும் இருந்தனர். போட்டியின் ஐந்தாவதும் இறுதியுமான நாள் இன்றாகும்.

# பிரபல அமெரிக்க ராப் இசைப் பாடகர் மேடையிலேயே மயங்கி விழுந்து உயிரிழப்பு





அமெரிக்காவின் ஹூஸ்டன் மாகாணத்தில் ராப் இசை பாடகராக இருந்தவர் பிக் போகி (வயது 45). அவர் பியூமோன்ட் நகரில் நடந்த கச்சேரி ஒன்றில் மேடையில் ராப் பாடல்களை பாடிக்கொண்டிருந்த போது, திடீரென அவருக்கு மூச்சி ரைப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர், மேடையிலேயே மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக அவரைச் சுற்றியிருந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருந் தனர்.

ஆனால், மேடையில் அவர் மயங்கி விழுந்ததுமே உயிரி ழந்து விட்டார் என மருத்துவ அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர். எனினும், போகி மரணம் அடைந்ததற்கான துல் லியமான மருத்துவக் காரண ங்கள் வெளியிடப்பட வில்லை.

மில்டன் போவல் என்ற இயற்பெயரை கொண்ட போகியின் மறைவால், அவரது தீவிர ரசிகர்கள் சோகத்தில் ஆழ்ந்து உள்ளனர்.

கடந்த 1999 ஆம் ஆண்டு தி ஹார்டஸ்ட் பிட் இன் தி லிட்டர் என்ற அல்பம் ஒன்றை வெளியிட்டு ரசிகர்களிடையே அவர் பிரபலமானார். அதன் பின்னர் அவர் பல்வேறு அல்பங்களை தனிப்பட்ட முறையிலும், கூட்டாக இணைந்தும் வெளியிட்டுள்ளார்.

## மன்னர் சார்ல்ஸின் பிறந்தநாளில் பல துறையினருக்கும் கௌரவ விருது!



பிரித்தானிய மன்னர் சார்ல்ஸின் பிறந்தநாளை முன்னிட்டு, பல துறையில் பங்களித்தவர்களுக்கும் கௌரவ விருது அளிக்கப்பட உள்ளதாகவும் இவர்களில் 40 பேர் இந்திய வம்சாவளியினர் எனவும் தெரியவந்துள்ளது.

வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி மன்னர் சார்ல்ஸின் 75 ஆவது பிறந்த நாளாகும். இதனை வெகுவிமர்சியாக கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில், மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்பை அளித்த 40க்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளியினருக்கு கௌரவ விருது அளிக்கப்பட உள்ளது.


இதற்காகப் பரிந்துரைக்கப்பட்ட 1,171 பேரில் 40 க்கும் மேற்பட்டவர்கள் இந்திய வம்சாவளி மருத்துவர்கள், தொழிலதிபர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் என தெரியவந்துள்ளது.

பிரித்தானியாவின் மன்னராக முடிசூட்டிக் கொண்ட பின்னர் மூன்றாம் சார்லஸ் கொண்டாட உள்ள முதல் பிறந்தநாள் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுக்கு வந்து இந்தியா கிரிக்கெட் விளையாடவேண்டும்

### ஜாவிட் மியான்டாட் வலியுறுத்து





வருகின்ற ஓகஸ்ட் 31 ஆம் தேதி ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடரின் போட்டிகள் முழுவதுமாக பாகிஸ்தானில் நடைபெறுவதாக இருந்தன. ஆனால், பாதுகாப்பு நிலைமைகளைக் காரணம் காட்டி, பாகிஸ்தானில் தாம் விளையாட மாட்டோம், என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தரப்பில் கூறப்பட்டது.

இதனையடுத்து, ஆசியக் கிண்ணத் தொடர் நடைபெறுமா? இல்லையா? என்று இழுபறி நீடித்து வந்த நிலையில் பாகிஸ்தானில் 4 போட்டிகளையும் , இலங்கையில் 9 போட்டிகளையும் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஒப்புக்கொண்டது.

இந்த நிலையில், இந்திய அணி பாகிஸ்தான் சென்று விளையாட மறுத்தது குறித்து பாகிஸ்தானின் முன்னாள் நட்சத்திர வீரர் ஜாவிட் மியான்டாட் செய்தியாளர் சந்திப்பில் பேசியிருக்கிறார். பாகிஸ்தான் அணி 2012 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இந்தியா வீற்கு வந்து விளையாடியது. அதனால், இம்முறை இந்திய அணி பாகிஸ்தான் வந்து விளையாடுவதுதான் சரியானதாக இருந்திருக்கும்.

நாம் எப்போதும் இந்தியாவுடன் எங்கும் விளையாடத் தயாராக இருக்கிறோம். ஆனால், அவர்கள் அதற்குத் தயாராக இல்லை. பாகிஸ்தான் கிரிக்கெட் மிகப் பலமானது. நாம் பல தரமான கிரிக்கெட் வீரர்களை உருவாக்கியே வருகிறோம்.

இப்படியான சூழலில் ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைக்க வேண்டும். கிரிக்கெட் என்பது மக்களை ஒருவருக்கொருவர் நெருக்கமாக்கும் விளையாட்டு. இரு தரப்பிலும் இருக்கும் புரிதலற்ற தன்மை மற்றும் குறைகளை அகற்றக்கூடிய விளையாட்டு. ஆனால், இந்தியா இதையெல்லாம் மனதில் வைத்து நடந்து கொள்ளவில்லை, என்று ஜாவிட் மியான்டாட் கூறியிருக்கிறார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.06.2023இல் வெளியிடப்பெற்றது.